ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2319/41 - 2023 පෙබරවාරි මස 14 වැනි අඟහරුවාදා - 2023.02.14
*2319/41 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பீ. 11/80 (35)*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2023, சனவரி 04.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2022 ஆம் ஆண்டின் உணவு (ஊடுசெல் - கொழுப்புச்சத்து) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி அன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆளொருவர், ஊடுசெல் கொழுப்புச்சத்து அடங்கிய ஏதேனும் பொதியிடப்பட்ட உணவு உற்பத்திப் பொருளை அத்தகைய உணவு உற்பத்திப் பொருளின் 100 கிராம் அல்லது 100 மில்லிலீற்றருக்கு இணங்கவாக அவ்வுணவு உற்பத்திப் பொருளின் ஊடுசெல் கொழுப்புச்சத்தின் மொத்த அளவு அத்தகைய பொதியிடப்பட்ட உணவு உற்பத்திப் பொருளின் சுட்டுத்துண்டின் மீது வெளிப்படுத்தப்பட்டாலொழிய விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ, விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ அல்லது விற்பனைக்கு வைத்திருத்தலோ அல்லது விற்பனைக்காக விளம்பரப்படுத்துதலோ ஆகாது.

3. இவ்வொழுங்குவிதிகள், புறநீங்கலாக ஏற்றுமதி நோக்கத்துக்காக உற்பத்தி செய்யப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

4. ஆளொருவர், விலங்குத் தோற்றுவாயின் கொழுப்புச் சத்தில் இயற்கையாக இடம்பெறுகின்ற ஊடுசெல் கொழுப்புச் சத்து தவிர்ந்த, ஊடுசெல் கொழுப்புச் சத்தின் உள்ளீடு ஏதேனும் உணவு உற்பத்திப் பொருளில் அடங்கியுள்ள மொத்த கொழுப்புச் சத்தின் இரண்டு சதவீதத்தை விஞ்சுகின்ற, இறுதிப் பாவனையாளர் ஒருவரினால் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட அவ்வுணவுப் பொருளின் சில்லறை விற்பனை அல்லது மொத்த விற்பனையில் ஈடுபடுதலாகாது.

5. இறுதிப் பாவனையாளர்களினால் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட, வேறு உணவு உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்களுக்கு உணவு உற்பத்திப் பொருட்களை ஆக்கக்கூறுகளாக வழங்கும் தொழிலில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள், விலங்குத் தோற்றுவாயின் இயற்கையாக இடம்பெறுகின்ற ஊடுசெல் கொழுப்புச் சத்து தவிர்ந்த ஊடுசெல் கொழுப்புச் சத்தின் அளவு அவ்வுணவுப் பொருளில் அடங்கியுள்ள மொத்த கொழுப்புச் சத்தின் அளவின் இரண்டு சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்து அவ்வளவு பற்றிய தகவலை அத்தகைய உற்பத்தியாளருக்கு வழங்குதல் வேண்டும்.

6. ஆளொருவர் எவையேனும் பகுதியளவில் ஐதரசன் ஏற்றப்பட்ட எண்ணெய்களை உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, இடம்பெயர்த்தலோ, விநியோகித்தலோ, களஞ்சியப்படுத்தலோ, விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலோ அல்லது வைத்திருத்தலோ, விற்பனைக்காக விளம்பரப்படுத்துதலோ ஆகாது.

7. ஆளொருவர், உணவுப் பொருளைத் தயாரிப்பதில் அல்லது உணவு உற்பத்திப் பொருட்களில் ஆக்கக்கூறொன்றாக பகுதியளவில் ஐதரசன் ஏற்றப்பட்ட எண்ணெய்களை பயன்படுத்துதலாகாது ;

ஆயின் எவ்வாறாயினும், 4 ஐ விடக் கூடுதலான அயடீன் பெறுமதியைக் கொண்ட இயற்கையாக இடம்பெறும் ஊடுசெல் கொழுப்புச் சத்துடனான ஏதேனும் உணவுப் பொருள் அல்லது உணவுப் பொருள் ஆக்கக்கூறு, அது ஐதரசன் ஏற்றப்பட்டாலேயொழியவும் முழுமையாக அல்லது ஏறத்தாழ முழுமையாக நிறை செறிவாக்கப்படாதிருந்தாலேயொழியவும் பகுதியளவில் ஐதரசன் ஏற்றப்பட்ட எண்ணெய்கள் அடங்கியதாகக் கருதப்படுதலாகாது.

8. இவ்வொழுங்குவிதிகளில் -

"இறுதிப் பாவனையாளர்" என்பது, செய்து முடிக்கப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்களை பயன்படுத்துகின்ற அல்லது நுகர்கின்ற ஆளொருவர் எனப் பொருள்படும் ;

"இயற்கையாக இடம்பெறுகின்ற ஊடுசெல் கொழுப்புச் சத்து" என்பது, விலங்குத் தோற்றுவாயின் கொழுப்புச் சத்தில் இயற்கையாக இடம்பெறுகின்ற ஊடுசெல் கொழுப்புச் சத்து எனப் பொருள்படும் ;

"பகுதியளவில் ஐதரசன் ஏற்றப்பட்ட எண்ணெய்கள் (PHO)" என்பது, ஐதரசன் ஏற்றப்பட்டனவும் முழுமையாக அல்லது ஏறத்தாழ நிறைசெறிவாக்கப்படாதனவும் 4 ஐ விடக் கூடுதலான அயடீன் பெறுமதியொன்றை (IV) கொண்டதுமான கொழுப்புச் சத்துக்கள் மற்றும் எண்ணெய்கள் எனப் பொருள்படும் ;

"ஊடுசெல் கொழுப்புச் சத்து" என்பது, நிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச் சத்து வடிவமொன்று எனப் பொருள்படும் என்பதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் -

(அ) விலங்குத் தோற்றுவாயின் கொழுப்புச் சத்தில் இயற்கையாக இடம்பெறும் ஊடுசெல் கொழுப்புச் சத்து ;
(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊடுசெல் கொழுப்புச் சத்து தவிர்ந்த ஊடுசெல் கொழுப்புச் சத்து.

EOG 02 - 0151

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.